ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர்
கோவையின் பெருமை
ரெஸ்டாரன்ட் - ஸ்வீட்ஸ் - ஈவென்ட் கேட்டரிங்

THE COVAI MAIL
8 ANNIVERSARY
RNI: TNBIL/2014/55455. ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER Postal Reg.No: CB/123/2021-23.

SREE Annapoorna SREE Gowrishankar
the pride of coimbatore
Restaurant - Sweets - Event Catering

Vol No. : 8 Issue No. : 40 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL Every Sunday, Jan 2-8, 2022, 8 Pages, Rs.5/- Annual subscription - Rs.260/-



# கரூர் ஃபார்முலா கோவையில் வெல்லுமா?



சாணக்கியன்
தி கோவை மெயில்

2016 அக்டோபரில் நடத்தப்பட வேண்டிய உள்ளாட்சித் தேர்தல் பல்வேறு அரசியல் மற்றும் சட்டப் போராட்டம் காரணமாக ஜெயலலிதா மறைவுக்குப்பின்,எடப்பாடி பழனிசாமி முதல்வராக இருந்தபோது ஊரக உள்ளாட்சித் தேர்தல் 2019 டிசம்பரில் நடைபெற்றது. இயல்பாகவே ஊரகத்தில் அதிமுகவுக்கு செல்வாக்கு அதிகம் இருக்கும் என்பதால் ஊரக உள்ளாட்சித் தேர்தலை நடத்தி தனது பிம்பத்தை அதிகரித்துக் கொள்ளலாம் என எடப்பாடி பழனிசாமி கணக்குப் போட்டு நகர்புறங்களுக்கு நீங்கலாக ஊரக உள்ளாட்சித் தேர்தலை நடத்தினார்.

அதில், எதிர்கட்சியாக இருந்த திமுக தனக்கு செல்வாக்கு குறைவான கிராமப்புற பகுதிகளில் அதிமுகவை விட கூடுதல் வெற்றியைப் பெற்றது. இருந்தாலும் ஸ்டாலினுக்கு மாற்று, தான் என்பதை உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள் மூலம் உணர்த்தினார் எடப்பாடி பழனிசாமி. இதற்கிடையே, பேரவைத் தேர்தலுக்கு பிறகு, விடுபட்டுபோன 9 மாவட்டங்களுக்கான உள்ளாட்சித் தேர்தல் இப்போது நடந்து முடிந்தது. இதில் திமுக அமோக வெற்றிபெற்றது.

மொத்தமுள்ள 148 மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்களில் 2 உறுப்பினர்களை மட்டுமே அதிமுக பெற்றாலும், ஒன்றியக்குழு உறுப்பினர்களைப் பொறுத்தவரை 20 சதவீத இடங்களை அதிமுக பெற்று திமுகவுக்கு மாற்று அதிமுக தான் என்ற நிலையை தக்கவைத்துக் கொண்டது. தங்களுக்கு செல்வாக்கு மிக்க 7 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சித் தேர்தல் நடந்தபோதும் தனித்து நின்ற பாமகவால் எந்த மாவட்ட ஊராட்சி வார்டுகளிலும் இரண்டாவது இடத்துக்கு வர முடியவில்லை.

இதற்கிடையே நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலை நடத்த திமுக தீவிர ஆர்வம் காட்டி வருகிறது. அநேகமாக ஜனவரி இறுதியிலோ அல்லது பிப்ரவரி தொடக்கத்திலோ இத்தேர்தல் வர வாய்ப்பு இருப்பதாக ஆளும் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஊரக உள்ளாட்சித் தேர்தல் போலவே நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலிலும் திமுக மிகப்பெரிய வெற்றியை ருசிக்கக்கூடும். ஆனால், திமுகவுக்கு இன்னும் கொங்கு மண்டலத்தில் சவால் காத்திருக்கிறது என்பதை முதல்வர் ஸ்டாலின் நன்கு உணர்ந்திருக்கிறார்.

இதனால் தான், சட்டப்பேரவைத் தேர்தலில் கொங்கு மண்டலத்தில் குறிப்பாக கோவை, சேலம் மாவட்டங்களில் பெற்ற தோல்வியில் இருந்து மீள்வதற்கு பல்வேறு அரசியல் வியூகங்களை தொடர்ந்து செய்து வருகிறார் முதலமைச்சர் ஸ்டாலின். இதற்கு காரணம், கருணாநிதி போல கூட்டணி கட்சிகளை நம்பி அரசியல் செய்யாமல், திமுகவை சொந்த பலத்தில் கொங்கு மண்டலத்தில் வளர்க்க வேண்டும் என உறுதியாகவுள்ளார் ஸ்டாலின்.

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் மாநிலம் முழுவதும் திமுக எளிதாக வெற்றிக்கனியை ருசித்தாலும், கோவை, சேலம் மாநகராட்சிகளில் திமுகவுக்கு அதிமுக கடும் போட்டியை உருவாக்கக்கூடும். இதற்கு காரணம், கோவை வேலுமணியின் கோட்டையாகவும், சேலம் எடப்பாடி பழனிசாமியின் கோட்டையாகவும் இருந்து வருகிறது. இதற்கு நிகரான தளபதிகள் திமுகவில் இல்லை என்பதே உண்மை.

இதை உணர்ந்து தான், பொறுப்பு அமைச்சர்களாகசேலம்மாவட்டத்துக்கு செந்தில் பாலாஜியையும், கோவைக்கு, அர.சக்கரபாணியையும் நியமித்தார். இருப்பினும், களத்தில் அனுபவம் மிக்க செந்தில் பாலாஜியை கோவையிலும், சேலத்தில் கே.என்.நேருவையும் வைத்து அதிமுகவை எதிர்கொள்வதே சரியான அணுகுமுறை என்பதை உணர்ந்த ஸ்டாலின், செந்தில் பாலாஜியை கோவைக்கு நகர்த்தி அங்கு தீவிர களப்பணியாற்றி வருகிறார்.

கோவைக்குச் சென்ற அமைச்சர் செந்தில் பாலாஜியும் 100 மாநகராட்சி உறுப்பினர்களைக் கொண்ட கோவை மாநகராட்சியை எப்படியாவது திமுக கைப்பற்றியே தீர வேண்டும் என பல்வேறு உத்திகளை கையாண்டு தீவிரமாக களப்பணியாற்றி வருகிறார். அதன் ஒரு பகுதியாக கோவை மாநகராட்சி பகுதியில் ஒரு லட்சம் மனுக்களை மக்களிடம் பெற்று அதற்கு தீர்வு காணுவது, ஒருங்கிணைந்த கோவை மாவட்ட திமுக பூத் கமிட்டி உறுப்பினர்களை அழைத்து உதயநிதி ஸ்டாலினை வைத்து கூட்டம் நடத்தியது என தொடர்ந்து உள்ளூர் திமுகவினரை அரசியல் களத்தில் பம்பரமாக சுழற்றும் முயற்சியில் இறங்கியுள்ளார்.

இதற்கு காரணம், அதிமுகவில் சக்திவாய்ந்த முகமாக திகழும் எஸ்.பி.வேலுமணி மீது பல்வேறு விமர்சனங்கள் இருந்தாலும், மக்களிடம் பழகும் அணுகுமுறை, கட்சி நிர்வாகிகளிடம் வேலை வாங்கும் அணுகுமுறை, வாக்குச்சாவடி நிர்வாகம் உள்ளிட்டவற்றில் வேலுமணிக்கு நிகர் வேலுமணி தான். இதன் காரணமாக தான் மாநிலம் முழுவதும் அதிமுக பின்னடைவை சந்தித்தபோதும் கோவை மாவட்டத்தில் மொத்தமாக 10 தொகுதிகளையும் அள்ளியது அதிமுக.

திமுகவால் ஒரு இடத்தைக் கூட கைப்பற்ற முடியாமல் போனதற்கு வேலுமணியின் தீவிர களப்பணியும், அரசியல் உத்திகளும் தான் காரணம்.

இதை இதுவரை உள்ளூர் திமுக பிரமுகர்களே உணரவில்லை, தொடர்ந்து மாநகராட்சி தேர்தலிலும் வேலுமணிக்கு உள்ளூர் திமுகவினால் ஈடுகொடுக்க முடியுமா என ஸ்டாலின் மனதில் எழுந்ததால் தான் வேலுமணிக்கு நிகராக களப்பணியாற்றக் கூடிய வல்லமை படைத்த செந்தில் பாலாஜியை ஸ்டாலின் களம் இறக்கியுள்ளார். ஸ்டாலினின் எண்ண ஓட்டத்தை நன்கு புரிந்துகொண்ட செந்தில் பாலாஜியும், கோவை மாநகராட்சியில் 100 வார்டுகளிலும் திமுகவை வெற்றிபெற செய்வதற்கான உத்திகளை கையாண்டு வருகிறார்.

இயல்பாகவே, 1957 முதல் திமுக வலு குறைந்த பகுதியாகவே கோவை இருந்து வருவது செந்தில்பாலாஜிக்கு கடும் சவால்தான். 1996 பேரவைத் தேர்தலை தவிர்த்து மீதமுள்ள அனைத்து பேரவைத் தேர்தல்களிலும் திமுக இப்பகுதியில் தோல்வியைச் சந்தித்துள்ளது. 2006 உள்ளாட்சித்தேர்தலில் கூட கோவை மாநகராட்சியில் அதிமுக பலத்துடன் கூடிய எதிர்கட்சியாகவே இருந்தது. 2006 பேரவைத் தேர்தலில் திமுக ஆளும் கட்சியாக வந்தபோதும், மொத்தமுள்ள 14 தொகுதிகளில் 4 தொகுதிகளில் மட்டுமே திமுக வெற்றிபெற முடிந்தது. 2011 பேரவைத் தேர்தலில் அதிமுக, தேமுதிக கூட்டணியால் திமுக காணாமல் போனது. 2016 பேரவைத் தேர்தலில் சிங்காநல்லூர் தொகுதியில் மட்டுமே திமுக வெற்றிபெற்றது.

**நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் கோவை மாநகராட்சியில் கோட்டை விட்டால் மீண்டும் தனது பிம்பம் உடைபடக்கூடும் என்பதை முன்கூட்டியே உணர்ந்த முதலமைச்சர் ஸ்டாலின், செந்தில் பாலாஜியை களம் இறக்கி எப்படியாவது திமுகவுக்கு சாதகமான சூழலை உருவாக்க முயற்சி செய்துகொண்டிருக்கிறார்.**

இந்நிலையில் தான், நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் கோவை மாநகராட்சியில் கோட்டை விட்டால் மீண்டும் தனது பிம்பம் உடைபடக்கூடும் என்பதை முன்கூட்டியே உணர்ந்த ஸ்டாலின், செந்தில் பாலாஜியை களம் இறக்கி எப்படியாவது திமுகவுக்கு சாதக சூழலை உருவாக்க முயற்சி செய்துகொண்டிருக்கிறார். செந்தில்பாலாஜியும் பழைய திமுக நிர்வாகிகளை மாற்றிவிட்டு புதிய நிர்வாகிகளை கொண்டு எப்படியாவது வெற்றிபெறவேண்டும்என்றமுனைப்பில் தீவிரக் களப்பணியாற்றி வருகிறார். அதற்கு உதயநிதி ஸ்டாலினையும் தொடர்ந்து பயன்படுத்தி வருகிறார். கோவையில் உள்ள கள நிலவரத்தை ஆழமாக புரிந்துகொண்ட உதயநிதியும், மாதம் 10 நாள்கள் கோவையில் தங்கியிருந்து களப்பணியாற்ற தயார் என அறிவித்துள்ளார். மேலும், வேலுமணியை குறிவைத்து பேசினால் தான் திமுக தொண்டர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த முடியும், மேலும், மக்கள் மனதில் இருக்கும் வேலுமணியின் மதிப்புமிக்க பிம்பத்தை உடைத்தால் மட்டுமே திமுகவுக்கு வெற்றி கிடைக்கும் என்பதால் வேலுமணியை குறிவைத்து தொடர்ந்து அரசியல் ரீதியாக விமர்சனம் செய்து வருகிறார். இயல்பாகவே கொங்கு மண்டலத்தில் குறிப்பாக கோவை மாவட்டத்தில் தேசிய, ஆன்மிக உணர்வு மிக்க வாக்காளர்கள் அதிகம். பிறமொழி பேசும் (மலையாளம், கன்னடம்) சமூக வாக்காளர்கள் எண்ணிக்கையும் இங்கு குவிந்து கிடக்கிறது.

மாநில சுயாட்சி, தமிழ் பற்று போன்றவற்றை பிரதானமாக திமுக கொண்டிருப்பதால் இம்மாவட்ட வாக்காளர்களிடம் இயல்பாகவே திமுக பின்தங்கிவிடுவது, வழக்கமாகவே பல தேர்தல் முடிவுகளில் காணலாம். 1998 குண்டு வெடிப்பு சம்பவத்திற்க்கு பிறகு கோவை மாவட்ட அரசியலில் இந்துத்துவா உணர்வு மேலோங்கிவிட்டது.

இதை ஜெயலலிதா தனது நுட்பமான அறிவால் தனக்கு சாதகமாக்கி வைத்துக்கொண்டார். இதனால் திராவிட இயக்கக் கொள்கையை அழுத்தமாக பேசும் திமுகவால் இதுவரை அங்கு வெற்றியே பெற முடியாத சூழ்நிலை தான் இருந்து வருகிறது. இதை உணர்ந்து தான் அரசியல் களத்தை எந்த வகையில் தங்களுக்கு சாதகமாக மாற்ற முடியுமோ அந்த வகையில் மாற்றுவதற்கான முயற்சியில் செந்தில்பாலாஜி மூலம் திமுக இறங்கியுள்ளது. திமுகவின் இந்த முயற்சி கைகொடுக்குமா என்பதை நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் முடிவு உணர்த்தும்.

## யார் இந்த செந்தில் பாலாஜி?

இது குறித்து அரசியல் விமர்சகர் ரிஷி கூறும்போது, கரூர் மாவட்டத்தில் சக்தி வாய்ந்த திமுக மாவட்டச் செயலாளராக கே.சி.பழனிச்சாமி இருந்தபோதே அவரை இழுத்து அரசியல் செய்தவர் செந்தில்பாலாஜி. 2006 ஆம் ஆண்டு அதிமுக தோற்ற போதிலும் அரவக்குறிச்சியில் வெற்றி பெற்றார். அதிமுகவில் தொடர்ந்து நான்கு ஆண்டுகாலம் போக்குவரத்து துறை அமைச்சராக இருந்தார் செந்தில் பாலாஜி. 2021ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் அரவக்குறிச்சியில் எளிதாக நின்று வெற்றி பெறாமல் எம்.ஆர். விஜயபாஸ்கரை தோற்கடிக்க வேண்டும் என்பதற்காக கரூரில் போட்டியிட்டு மிகக் கடினமான சூழலில் கரூர் மாவட்டத்தில் 4/4 இடங்களில் திமுகவை வெற்றி பெறச் செய்தார்.

செந்தில் பாலாஜி கரூரில் போட்டியிடவில்லை என்றால் நிச்சயம் எம். ஆர். விஜயபாஸ்கர் வெற்றி பெற்றிருப்பார். இதன்மூலம் ஸ்டாலினின் நம்பிக்கைக்குரிய தளபதியாக மாறியுள்ளார் செந்தில்பாலாஜி. அதனால் தான் மிகப்பெரிய அமைச்சரவையான மின்சாரத் துறையை ஒப்படைத்துள்ளார் ஸ்டாலின். கொங்கு மண்டலத்தில் திமுக தோல்வியடைந்தது ஸ்டாலினுக்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளதோடு குறிப்பாக கோவையில் 10/10 இடங்களிலும் திமுக தோல்வியுற்றது மன வருத்தத்தைக் கொடுத்துள்ளது.

கோவையில் அதிமுக வெற்றி பெற எஸ்.பி.வேலுமணி முக்கிய காரணம். அவருக்கு நிகராக கள அரசியல் செய்வதற்கு செந்தில் பாலாஜியால் தான் முடியும் என்பதற்காக கோவை மாவட்ட பொறுப்பு அமைச்சராக நியமித்துள்ளார் ஸ்டாலின்.

## எடப்பாடி கோட்டையில் திமுக நுழையுமா ?

கோவையைப் போலவே சேலம் மாவட்டமும் அதிமுகவின் கோட்டையாகவே வீரபாண்டி ஆறுமுகத்தின் காலத்துக்குப்பின் இருந்து வருகிறது. குறிப்பாக 2011 பேரவைத் தேர்தலில் வீரபாண்டியார் எதிர்ப்பு உச்சத்தை தொட்டது. அதை நேரடியாகவே ஜெயலலிதா அறுவடை செய்தார். அதன் பிறகு, அதிமுக பலம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. 2016 பேரவைத் தேர்தலில் கூட சேலம் வடக்கு தவிர பிற அனைத்து தொகுதிகளையும் அதிமுகவே கைப்பற்றியது. 2021 பேரவைத் தேர்தலிலும் அதேநிலை தான் தொடர்ந்தது.

சேலத்தில் வன்னியர் சமூகம் பெரும்பான்மையாகவும், எடப்பாடி பழனிசாமியின் கொங்கு வேளாளர் கவுண்டர் சமூகம் சிறிய எண்ணிக்கை சமூகமாகவே இருந்து வருகிறது. இருப்பினும், வன்னியர்களுக்கு 10.5 சதவீத உள்ஒதுக்கீட்டை எடப்பாடி பழனிசாமி கொடுத்ததன் மூலம் சேலத்தில் இருக்கும் பெரும்பான்மை வன்னியர்களின் ஆதரவை பெற்றுக்கொண்டார். 2019 மக்களவைத் தேர்தலில் சேலம் மக்களவைத் தொகுதிக்குட்பட்ட எடப்பாடி பேரவைத் தொகுதியில் 8 ஆயிரம் வாக்குகள் குறைவாக பெற்ற அதிமுக, 2021 பேரவைத் தேர்தலில் எடப்பாடி பழனிசாமி நிற்கும்போது அது 94,000 வாக்குகளை அதிகம் பெற்றது. இதற்கு காரணம் வன்னியர்களுக்கான இடஒதுக்கீடு தான்.

பாமக கூட்டணியை விட்டு வெளியேறிய பின்னர் வன்னியர் வாக்குகளை அதிமுக தக்கவைக்க முடியுமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. வன்னியர் வாக்குகளை பாமக மட்டுமே அறுவடை செய்ய வேண்டும் என்பதை மனதில் வைத்துக்கொண்டு சேலம் மாவட்டம் ஓமலூரில் அண்மையில் நடந்த பாமக மாவட்ட பொதுக்குழுக் கூட்டத்தில் கூட்டணி தர்மத்தை அதிமுக மீறிவிட்டது, இதனால் தான் பாமக தோல்வி அடைந்தது என ராமதாஸ் விமர்சனம் செய்தார்.



தனக்கு சாதகமாக விழுந்த வன்னியர் வாக்குகளை ராமதாஸ் தந்திரமாக பிரிக்க முயற்சி செய்கிறார் என்பதை உணர்ந்துகொண்ட எடப்பாடி பழனிசாமி, ராமதாஸ் அடிக்கடி அணி மாறுபவர் என விமர்சனம் செய்துள்ளார். இதன் மூலம் வன்னியர் வாக்குகளை அதிமுகவே தக்கவைக்க முடியும் என எடப்பாடி பழனிசாமி நம்புகிறார்.

வன்னியர் வாக்குகள் பாமகவுக்கோ அல்லது திமுகவுக்கோ நகர்ந்தால் அது திமுகவுக்கு மிகப்பெரிய சாதகமாக மாறிவிடும், மேலும் சேலம் மாகராட்சியை திமுக எளிதாக கைப்பற்றிவிடக்கூடும், அதை எப்படியாவது தடுக்க வேண்டும் என்ற முயற்சியில் எடப்பாடி பழனிசாமியும் இறங்கியுள்ளார். சேலம் மாநகராட்சியை யார் கைப்பற்றப் போவது என்பதை வன்னியர் வாக்குகளே முடிவு செய்யும். வேலுமணி, எடப்பாடி பழனிசாமி கோட்டையை திமுக கைப்பற்றுமா என்பது நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் முடிவில் தெரிந்துவிடும்.

## ஆற்றல் அறக்கட்டளை சார்பில்
# அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு ‘சாதனை செல்வர்’ விருது

தி கோவை மெயில்

ஆற்றல் என்ற தனியார் அமைப்பின் சார்பில் ஆற்றல் விருது வழங்கும் விழா 2021 கோவை இந்துஸ்தான் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இந்த விழாவில் அமைச்சர் செந்தில் பாலாஜி மற்றும் நடிகர் சத்யராஜ் உள்ளிட்டோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்று ஆசிரியர், ஆட்டோ ஓட்டுநர், விவசாயி, துப்புறவு பணியாளர், செவிலியர், வீட்டு வேலை செய்பவர் என 74 தொழில்களின் அடிப்படையில் விருதுகளை வழங்கினர்.

முன்னதாக 103 வயதில் விவசாய பணி மேற்கொண்டு வரும் கோவை மேட்டுபாளையம் பகுதியைச் சேர்ந்த பாப்பம்மாள் மூதாட்டியிடம் விருதினை வழங்கிய அமைச்சர் செந்தில் பாலாஜி மேடையிலேயே அவரது காலை தொட்டு வணங்கி நெகிழ்ச்சியூட்டினார். மேலும் இந்த விழாவில் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு சாதனை செல்வர் விருது வழங்கப்பட்டது.

தொடர்ந்து பேசிய அமைச்சர், ஒவ்வொருவரிடமும் ஒரு திறமை உண்டு எனவும் அதனை வெளிப்படுத்தி நாம் வெற்றி பெற வேண்டும் எனவும் அறிவுறுத்தினார். சென்னைக்கு அடுத்தபடியாக கோவைக்கு புதிய தொழிற்சாலைகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டுள்ளார் முதலமைச்சர் என்றும் கோவையில் பத்து தொகுதிகளில் எதிர்கட்சிகள் வென்றாலும் 234 தொகுதிகளையும் தன்னுடைய தொகுதியாக எண்ணி திட்டங்களை கொடுத்து வருகிறார் என்றும் பெருமிதம் கொண்டார்.

இதைத் தொடர்ந்து பேசிய நடிகர் சத்யராஜ், தமிழகத்தில் சரியான துறைக்கு சரியான அமைச்சர்களை நியமித்துள்ளார் முதலமைச்சர் என்றார்.

மேலும் கலைப் போராளியாக இருப்பது சுலபம், ஆனால் களப் போராளியாக இருப்பது சுலபமல்ல என்ற அவர், அமைச்சர் செந்தில் பாலாஜி களப்போராளியாக 25 ஆண்டுகளாக தொடர் வெற்றிகளை பெற்று சிறப்பாக செயல்பட்டு வருகிறார் என்றும் புகழாரம் சூட்டினார்.


அமைச்சருக்கு சாதனை செல்வர் விருதினை சத்யராஜ் வழங்குகிறார். அருகில், இந்துஸ்தான் கல்வி நிறுவனங்களின் அறங்காவலர் சரஸ்வதி கண்ணையன்.

# கர்ம யோகம் என்றால் என்ன?

தி கோவை மெயில்

யோகாவின் நான்கு பாதைகளில் கர்ம யோகம் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. கர்ம யோகம் என்றால் என்ன? கர்மாவிற்கும் கர்ம யோகாவிற்கும் உள்ள வித்தியாசம் என்ன? இவற்றை தெளிவாக விளக்குகிறது இக்கட்டுரை...

சத்குரு:

**கர்மயோகம் என்றால் சேவையா?**

பலரும் கர்மயோகம் என்றால் சேவை செய்வதென எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், கர்மயோகம் என்பது, நீங்கள் சேகரித்து வைத்திருக்கும் பல பதிவுகளை நீக்குவது. ஏதேனும் ஒரு செயலில் உங்களை மகிழ்ச்சியாய் நீங்கள் ஈடுபடுத்திக் கொள்ளமுடிந்தால் அதுவே கர்மயோகம்.

கடும் முயற்சியுடன் ஒன்றை நீங்கள் மேற்கொண்டால் அது கர்மம் மட்டும்தான், அதில் யோகா இருக்காது. பொதுவாகவே, நீங்கள் செய்கிற பல்வேறு செயல்கள் மூலமாகத்தான் வாழ்க்கையில் சிக்கிப் போய் பல பிணைப்புகளுக்கு ஆளாகிறீர்கள். ஆனால், செயலே உங்களை பிணைப்பதற்குப் பதிலாக உங்கள் விடுதலைக்கு வழியாய் இருந்தால் அதுதான் கர்மயோகம்.

**உங்களுக்கு சம்பந்தமே இல்லாத வேலையில் முழு ஈடுபாட்டுடன் நீங்கள் இறங்குவதுதான் விடுதலைக்கான வழி. அந்த வேலை உங்களை பிணைப்பதாக ஆகுமென்றால், அது ‘கர்மம்’. எனவே, நீங்கள் எவ்வளவு வேலை செய்கிறீர்கள் என்பது பொருட்டல்ல. எப்படி செய்கிறீர்கள் என்பதைப் பொறுத்தே எல்லாம் அமைகிறது. ”**

நீங்கள் வேலை பார்த்தாலும் சரி, வீதியில் நடந்தாலும் சரி அல்லது யாருடனாவது பேசிக் கொண்டிருந்தாலும் சரி, நீங்கள் என்ன செயல் செய்கிறீர்கள் என்பது முக்கியமில்லை. ஒரு காரியத்தை அதன் தேவை கருதி மட்டுமே செய்கிறீர்கள். அது உங்களுக்கு ஒரு பொருட்டாக இல்லை. ஆனாலும், உங்கள் வாழ்க்கையே அதுதான் என்று நினைக்கத்தக்க தீவிரத்துடன் நீங்கள் செய்கிறீர்கள் என்றால், அந்தச் செயல் உங்களுக்கு விடுதலை தருவதாக இருக்கும்.

**தியானலிங்கத்தின் போது:**

நாம் தியானலிங்கத்தை உருவாக்கிக் கொண்டிருந்தபோது, அதில் பலரும் வெகுதீவிரமாக ஈடுபட்டார்கள். அவர்கள் எல்லோருமே, “சத்குரு இதை செய்துமுடிக்க எண்ணுகிறார். இந்த வேலையை முடித்துவிடலாம். பின்னர் ஓய்வெடுக்கலாம்,” எனும் எண்ணத்தில் உழைத்தார்கள்.

வீடு வீடாகச் செல்வது, நிதி கேட்பது, தேவையான உதவிகளைப் பெறுவது என எல்லாவற்றையும் செய்தார்கள். தியானலிங்கம் உருவானதும் அவர்கள் “அப்பாடா” என்று மூச்சு விடுவதற்கு முன்னர், நான் புதிதாக பத்து திட்டங்களை அறிவித்தேன். இத்தகைய திட்டங்களை நான் தொடர்ந்து தந்து கொண்டேயிருப்பேன். ஏனென்றால், தங்கள் நிறைவு, விருப்பு, வெறுப்பு போன்றவை பற்றிய கவலையில்லாமல் இத்தகைய செயல்களில் தொடர்ந்து ஈடுபடவேண்டும்.

எப்படியும் அவர்கள் வளர்ச்சிக்கான செயல்களில் இறங்குகிறார்கள். அந்தச் செயல் எல்லோருக்கும் பயன்தரும் செயலாக அமையட்டுமே! உங்களுக்கு எவ்விதத்திலும் பொருட்டேயில்லாத காரியத்தில் முழு ஈடுபாட்டுடன் இறங்குவது, உங்கள் கர்மவினையின் கட்டமைப்பை உடைக்கும்.


**குர்ஜீஃபின் செயல்:**

பல ஞானிகள் இத்தகைய செயல்களைத் தந்தபடி இருந்ததுண்டு. குர்ஜீஃப், ஐரோப்பாவில் தன் மையங்களைத் தொடங்கியபோது ஐரோப்பாவின் மேல்மக்கள் அவரிடம் வந்தார்கள். அவர்களிடம் மண்வெட்டியையும், கடப்பாறைகளையும் கொடுத்து “குழிகள் வெட்டுங்கள்” என்றார்.

அவர்கள் அத்தகைய வேலையை செய்து பழகியதில்லை. எனவே, கொளுத்தும் வெயிலில் நின்று குழிகள் வெட்டியதில் கொப்புளங்கள் உருவாகிவிட்டன. குர்ஜீஃப் அங்கேயே நின்று வேலை வாங்கிக் கொண்டிருந்தார். அவர்களுக்கோ கடும் பசி. ஆனாலும், குரு சொன்ன வேலையை விடாமல் செய்து கொண்டே இருந்தார்கள். மாலை மங்கி இரவும் வந்தது. குர்ஜீஃப் கடிகாரத்தைப் பார்த்துச் சொன்னார். “இரவு ஏழு மணியாகிவிட்டது. எல்லோரும் வெட்டிய குழிகளை மூடிவிட்டு வாருங்கள். நாம் சாப்பிடப் போகலாம்.”

**‘கர்மம்’ என்றால்...**

‘கர்மம்’ என்றால் செயல். அது யோகாவாக மாறவேண்டுமென்றால், அந்தச் செயல் உங்களுக்கு விடுதலை தருவதாக இருக்க வேண்டும். உங்களுக்கு சம்பந்தமே இல்லாத வேலையில் முழு ஈடுபாட்டுடன்



நீங்கள் இறங்குவதுதான் விடுதலைக்கான வழி. அந்த வேலை உங்களை பிணைப்பதாக ஆகுமென்றால், அது ‘கர்மம்’. எனவே, நீங்கள் எவ்வளவு வேலை செய்கிறீர்கள் என்பது பொருட்டல்ல. எப்படி செய்கிறீர்கள் என்பதைப் பொறுத்தே எல்லாம் அமைகிறது. முக்கிமுனகி வேலை செய்தால் அது கர்மா. மகிழ்ச்சியும், நன்மையுமாய் உங்கள் வேலை வெளிப்பட்டால் அது கர்மயோகம்.

ஆன்மீக சாதனையில் ஈடுபடுவதற்கு செயல் வேண்டுமா என்று சிலர் கேட்பார்கள். செயல் கடந்த நிலைக்கு செல்வதற்குத்தான் யோகா. ஆனால், பலருக்கும் அது சாத்தியமில்லை. செயல் இழந்த நிலை என்பது வழுக்குகிற பாறை. மிக எளிமையானது அதுதான், மிக கடினமானதும் அதுதான். அதற்கோர் ஊன்றுகோல் தேவை.

அந்த ஊன்றுகோல் தான் கர்மயோகம். அவர்களின் ஆன்மீக வழிக்கு கர்மயோகம் உறுதுணையாய் இருக்கிறது.

2022

இந்தப் புத்தாண்டில் உங்கள் அனைவரின் வாழ்க்கையிலும் மகிழ்ச்சியும், தன்னம்பிக்கையும் பெருக வாழ்த்துகள்!

– ஆசிரியர், திகோவைமெயில்

## குழந்தைகளை மகிழ்வித்த சோனி ஒய்.ஏ.ஒய்

தி கோவை மெயில்

குழந்தைகளுக்கான கேளிக்கை நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி வரும் சோனி ஒய்ஏஒய் தொலைக்காட்சியில் புகழ் பெற்ற கார்ட்டூன் தொடரான ‘ஓகியும் கரப்பான் பூச்சிகளும்’ தொடர் ஒளிபரப்பாகி வருகிறது. இந்த தொடர் குழந்தைகளிடம் வரவேற்பை பெற்ற தொடராகும்.

இதன் மகிழ்ச்சியை நேரடியாக குழந்தைகளுக்கு வழங்கும் விதமாக “பன் கி சவாரி” என்னும் நிகழ்ச்சி ஒன்றை இந்த தொலைக்காட்சி வழங்குகிறது. இதன் மூலம் வேன் ஒன்று தமிழகம் முழுவதும் சென்று பல்வேறு போட்டிகளையும் விளையாட்டுகளையும் குழந்தைகளுக்காக நடத்துகிறது.

அதன் ஒரு பகுதியாக இந்த வேன் கோவையில் கடந்த 4 நாட்கள் முகாமிட்டு குழந்தைகளுக்கு பல்வேறு போட்டிகளை நடத்தியது. கோவையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் ஏராளமான குழந்தைகள் கலந்து கொண்டு பிரபலமான கார்ட்டூன்களுடன் விளையாடி மகிழ்ந்ததுடன் பரிசுகளையும் வென்றனர்.

இந்த வேன் கடந்த 15ந் தேதி தனது பயணத்தை துவங்கியது. இதன் பயணம் வரும் ஜனவரி 10ந் தேதி நிறைவடைகிறது. 25 நாள் பயணத்தில் இந்த வேன் வேலூர், திருவள்ளூர், விழுப்புரம், சேலம், திருப்பூர், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய ஊர்களுக்கு செல்கிறது.

கோவை வந்த வேன் முக்கிய குடியிருப்பு பகுதிகள் மற்றும் பிரபலமான இடங்களுக்கு சென்று அங்குள்ள குழந்தைகளிடம் மிகுந்த உற்சாகத்தை ஏற்படுத்தியது.

## ஒமைக்ரான் மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தும்
### -பில் கேட்ஸ் எச்சரிக்கை

தி கோவை மெயில்

மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் நிறுவனரும் உலக கோடீஸ்வரர்களில் ஒருவருமான பில் கேட்ஸ், ஒமைக்ரான் வைரஸ் குறித்து எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார். இது குறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் பல்வேறு கருத்துக்களை பதிவு செய்துள்ளார்.

அதில், வாழ்க்கை இயல்பு நிலைக்கு திரும்பும் என்றிருந்த நிலையில், தொற்று நோயின் மிக மோசமான பகுதிக்குள் நாம் நுழைந்து விட்டோம். எனது நெருங்கிய நண்பர்களுக்கும் ஒமைக்ரான் பாதிப்பு வந்து விட்டது எனவும், தனது சுற்றுலா பயண திட்டத்தை ரத்து செய்து விட்டதாகவும் ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

வரலாற்றில் மற்ற அனைத்து வைரஸ்களையும் விட ஒமைக்ரான் மிகவும் வேகமாக பரவுகிறது என்றும், விரைவில் உலகின் அனைத்து நாடுகளிலும் இது பரவத் தொடங்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

# கான்கிரீட் குப்பைகள்

சூழல் தொடர்

தி கோவை மெயில்

நவீன கட்டுமானங்கள் அனைத்தும் சிமெண்ட் இல்லாமல் இன்று கட்டப்படுவதில்லை. இந்த கட்டிடங்கள் இடிக்கப்படும் பொழுதும், மாறுதல்கள் செய்யப்படும் பொழுதும் அந்த இடிபாடுகள் கான்கிரீட் குப்பைகளாக மாறிவிடுகின்றன.

நீர்நிலைகள் மற்றும் சாலையோரங்கள் போன்ற பொது இடங்களில் கொட்டப்படும் குப்பைகளில் முக்கியமானதாகவும் அகற்றுவதற்கு மிகக்கடினமானதாகவும் இந்த கான்கிரீட் குப்பைகள் உருவாகின்றன.

பொதுவாகவே கான்கிரீட் குப்பைகள் இட நெருக்கடி மிகுந்த நகரங்களில் இருந்து அகற்றப்பட்டு நகர்ப்புறங்களிலும் நீர்நிலைகள் அருகிலும் போடப்படுகின்றன. நீர்நிலைகள் நீரை சேமிக்கவும், நிலத்தடி நீரை உருவாக்கவும் உருவாக்கப்பட்டவை. கூடவே ஒரு பல்லுயிர் சூழலை உருவாக்கி ஒரு உயிர்ச் சூழல் மண்டலம் ஆக பல பறவைகள், விலங்குகள், ஊர்வன, நீர்வாழ்வன என்று வாழும் இடமாக காலம் காலமாக காப்பாற்றி வருகின்றன. ஆக்ஸிஜனை உருவாக்கி குளிர்ந்த சூழலை உருவாக்கும் மரங்கள் இதன்




கரைகளில் இருக்கின்றன. பொதுவாக நகரம் போன்ற இயற்கைக்கு எதிரான செயல்பாடுகள் அதிகம் கொண்ட பகுதிகளில், மனிதர்கள் உயிர் வாழ சுவாசிக்க உதவும் பூமியின் நுரையீரல் ஆக இந்த இயற்கை சூழல் கொண்ட நீர்நிலைகள் திகழ்கின்றன.

ஆனால் கான்கிரீட் குப்பைகள் கொட்டப்படும் பொழுது மேற்சொன்ன இயற்கையாக உள்ள தன்மைகள் எல்லாம் மெல்ல மெல்ல மாறுகின்றன. இவையெல்லாம் வரன்முறைப்படுத்தப்பட வேண்டும். இவற்றுக்கு மாற்றுப் பயன்பாடுகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் கான்கிரீட் காடுகளாக முளைத்து நிற்கும் இந்த கட்டிடங்கள் கைவிடப்படும் பொழுது அவற்றை அகற்றுவதில் பெரும் சிரமம் ஏற்படும். இப்போது பூமியில் உருவாகும் குப்பைகளை என்ன செய்வது என்று உலக அளவில் விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில்தான் இயற்கை நிலப்பரப்பை அழித்து, நீர் பூமியில் ஊடுருவ முடியாமல் பயனற்ற குவியல்களாக கான்கிரீட் குப்பைகள் சேர்ந்து கொண்டே போகின்றன.

ஒருபுறம் 33% வனப்பகுதி அமைந்திருக்க வேண்டும். குறைந்தது பசுமை நிலப்பரப்பு 10 சதவீதமாக இருக்கும் அளவுக்கு பசுமை நிலப் பரப்பை அதிகரிக்க வேண்டும் என்று எல்லாம் வழிமுறைகள், திட்டங்கள், வகுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் மண் சுவாசிக்க முடியாமல், குப்பைகளைக் கொட்டி மூடுவது பெரும் தவறு. ஒரு காலத்தில் மணல் கிடைக்கிறது என்பதற்காக விளைவுகளைப் பற்றி யோசிக்காமல் எங்கெங்கு நதிப் படுகை உள்ளதோ அங்கெல்லாம் தோண்டித் தோண்டி ஆற்றுமணல் என்பதே இல்லாமல் போய்விட்டது. பதிலுக்கு எம் சாண்ட் என்று கண்டுபிடித்து பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். அது போலவே கான்கிரீட் குப்பைகளை எப்படி பயனுள்ள முறையில் பயன்படுத்துவது என்று யோசித்து வழிமுறைகளை கண்டறிய வேண்டும்.

ஒருபுறம் இயற்கையில் உருவாகியிருக்கும் மலைகள், பாறைகளை உடைத்து கற்களாக மாற்றி நமது பயன்பாட்டுக்கு கொண்டு வருகின்றோம். அந்த கற்கள் பல இடங்களில் வீடு உள்ளிட்ட கட்டுமானங்களில் பில்லர் எனும் குழிகளை நிரப்புவதற்காக பயன்படுகின்றன. அதற்கு பதிலாக இந்த கான்கிரீட் குப்பைகளை பயன்படுத்தலாம். அது போல பயன்படுத்தும்பொழுது இப்போதைக்கு உடைத்து எடுக்கும் மலைகள், பாறைகளில் ஒரு பகுதியையாவது காப்பாற்ற முடியும். இதுபோல வேறு என்னென்ன பயன்பாட்டுக்கு கான்க்ரீட் குப்பைகளை பயன்படுத்த முடியும் என்று அறிவியலாளர்கள், சுற்றுச் சூழலியலாளர்கள், பொறியாளர்கள் கண்டுபிடித்து வழி காட்ட வேண்டும்.

பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு உருவான குளங்கள் போன்ற நீர் நிலைகளின் பரப்பைக் குறைக்கும் வகையில் கான்கிரீட் குப்பைகள் கொட்டப்படுவது உடனடியாக தடுக்கப்பட வேண்டும். அரசும் இது குறித்து புதிய வழிமுறைகளையும், சட்டங்களையும், தீர்வுகளையும் உருவாக்க வேண்டும். இந்த பூமியின் இயற்கை தன்மை மாறாமல் இருக்கும் வரைதான், இந்த மண் உயிரோடு இருக்கும் வரை தான் மனிதர்களும் மற்ற உயிர்களும் இங்கு சீராக வாழ இயலும். இதை உணர்ந்து மனிதர்களாகிய நாம் உருவாக்கும் இந்த கான்கிரீட் குப்பைக்கு உடனடியாக தீர்வு காண வேண்டும்.




# முன்னெச்சரிக்கையும் முன்னேற்பாடும்!

**தி கோவை மெயில்**

2020-ல் உலகம் முழுவதும் பரவத் தொடங்கிய கொரோனா நம் அனைவரின் வாழ்விலும் தாக்கத்தையும், மாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக வாழ்வாதாரச் சிக்கல், பொருளாதார நெருக்கடி போன்றவற்றையும் எதிர்கொண்டோம்.

கொரோனா பெருந்தொற்று ஓரளவு கட்டுக்குள் வந்து நிலைமை சீராகி இயல்பு நிலைக்கு திரும்பும் தருணத்தில், கொரோனாவின் உருமாற்றம் அடைந்த ஓமைக்ரான் பரவி, நாளுக்கு நாள் பாதிப்பு எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. டெல்டா பரவலின் வேகத்தை விட இதன் பரவும் வேகம் அதிகமாக உள்ளது எனவும் இது அபாய கட்டத்தை எட்டியுள்ளது எனவும் உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்தியாவில் ஓமைக்ரானால் மூன்றாம் அலை ஏற்படுமா என்ற அச்சமும், இதனைக் கட்டுப்படுத்த தடுப்பூசி கைகொடுக்குமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இதுகுறித்த பல சந்தேகங்களை கோவையைச் சேர்ந்த பிரபல மருத்துவமனையின் மருத்துவர்களிடம் கேட்டபோது அவர்கள் அளித்த பதில்களின் தொகுப்பு:

## தடுப்பூசி செலுத்தியிருந்தால் ஓமைக்ரான் தாக்கம் குறைவே

டாக்டர் **நிர்மலா,** டீன்,
கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை



கோவையைப் பொறுத்தவரை கொரோனாவினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. தற்போது உருமாற்றம் அடைந்துள்ள ஓமைக் ரான் தொற்று இரண்டு தவணை தடுப்பூசி செலுத்தியவர்களுக்கும் ஏற்படுகிறது என பதிவாகியுள்ளது. மேலும் தடுப்பூசி போட்டுக் கொண்டால் ஓமைக்ரான் பாதிப்பு ஏற்படாது என்று கூறிவிட முடியாது. ஆனால் அதன் தாக்கம் குறைவாகவே இருக்கும். மேலும் ஓமைக்ரான் பாதிப்பு ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதும் மிக மிக குறைவு தான்.

கொரோனா முதல் அலையை விட இரண்டாம் அலையினால் ஏற்பட்ட தாக்கம் அதிகமாக இருந்தது. அதனால் அப்போது கோவை அரசு மருத்துவமனையில் ஏற்படுத்தப்பட்ட அனைத்து உட்கட்டமைப்பு வசதிகள் இப்போதும் உள்ளது. எனவே மூன்றாம் அலை ஏற்பட்டால் அதை எதிர்கொண்டு சமாளித்து விடவும் முடியும்.

மிதமான பாதிப்பு ஏற்படுபவர்கள் ஆங்காங்கே அருகில் உள்ள மருத்துவமனைகளிலே சிகிச்சை எடுத்துக் கொள்ளலாம். மேலும் தீவிர பாதிப்பு இருந்தால் கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை போன்றவற்றில் சிகிச்சை எடுத்துக் கொள்ளலாம். மிதமான பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கான சிகிச்சை மையத்தை அமைப்பதற்கான போதுமான நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்து வருகிறது.

## மூன்றாம் அலையை எதிர்கொள்ள தயார்!

டாக்டர் **சுகுமாரன்,** டீன்,
ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை



குளிர்காலத்தில் நமது உடலின் நோய் எதிர்ப்புத் திறன் குறையும் சமயத்தில், ஓமைக்ரான் பாதிப்பு ஏற்பட்டால் அதன் தாக்கம் எப்படி இருக்கும் என்ற கேள்வி பலருக்கும் எழலாம். இது போன்ற நேரத்தில் வயதானவர்களுக்கு நுரையீரல் பாதிப்பு, ஆஸ்துமா போன்றவை இருந்தால், அவர்கள் ஓமைக்ரான் தொற்றினால் பாதிப்படைய வாய்ப்புள்ளது. ஆனால் மிக அதிகளவில் பாதிப்பு இருக்காமல் மிதமான அளவில் பாதிப்படையலாம்.

உருமாற்றம் அடைந்த ஓமைக்ரான் வைரஸ் குறித்த மதிப்பீட்டு தகவல்கள் முழுமையாகத் தெரியவில்லை. அதனால் தற்போதைய சூழ்நிலையில் குறிப்பிட்ட வயதினர்கள் மட்டுமே பாதிக்கப்படுவார்கள் என்று கூற முடியாது.

ஓமைக்ரான் மற்றும் டெல்டா என்ற இரண்டு வைரஸ்களும் ஒரே மாதிரியான அறிகுறிகளையே வெளிப்படுத்துகின்றன. இரண்டிற்கும் காய்ச்சல், தொண்டை வலி, இருமல், தசைவலி போன்ற அறிகுறிகள் தென்படுகின்றன.


ஓமைக்ரான் தொற்று ஏற்பட்டவர்களில், அவர்களின் நுரையீரலின் மேல் சுவாசப் பாதையில் பாதிப்பை ஏற்படுத்துகிறது என்றும், நுரையீரலுக்குள் ஆழமாக சென்று பாதிப்பை ஏற்படுத்துவதில்லை எனவும் தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த மருத்துவ விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். டெல்டா வைரஸ் பரவும் வேகத்தை விட ஓமைக்ரான் பரவலின் வேகம் 3 மடங்கு அதிகரிக்கும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதனால், இதுவரை தடுப்பூசியே செலுத்திக் கொள்ளாதவர்களுக்கு ஓமைக்ரான் பாதிப்பு ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளன.

மூன்றாவது அலை ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளதால் இனிவரும் காலங்களில் 24 மணிநேரமும் கூடுதல் படுக்கை வசதியுடன் சிகிச்சையளிக்க மருத்துவமனைகள் தயாராக இருக்க வேண்டும்.

ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனையில் 24 மணி நேரத்தில் 150 படுக்கைகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் தயாராக உள்ளோம். தேவையான மருந்துகள் தயார் நிலையில் இருக்கும் வண்ணம் எங்கள் மருத்துவமனை சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மூன்றாவது அலை ஏற்பட்டாலும் அதை எதிர்கொள்ள எங்கள் மருத்துவமனை தயாராக உள்ளது.

## More knowledgeable, Well-equipped


**Dr.Ragupathy Veluswamy,**
*CEO, GKNM Hospital*



Compared to first and second wave we are well equipped to manage and deal with the third wave if it becomes an issue. Our physicians are more knowledgeable about the disease and treatment process. We never eased up on COVID 19 precautions.

## உயிரிழப்பை ஏற்படுத்தாது!

டாக்டர் **வருண் சுந்தர மூர்த்தி,**
தொற்று நோய் சிகிச்சை நிபுணர்,
கே.எம்.சி.ஹெச்



ஓமைக்ரான் மற்ற நாடுகளில் வேகமாக பரவுவதைப் போல இந்தியாவிலும் அதே வேகத்தில் தான் பரவும். நோயின் தீவிரத் தன்மை மட்டும் குறைய வாய்ப்புள்ளது. ஏனென்றால் இந்தியாவில் தடுப்பூசி போதுமான அளவு செலுத்தப்பட்டு வருகிறது. வெளிநாடுகளில் ஏற்படும் சூழ்நிலையை இந்தியாவிலும் ஒப்பிட்டுப் பார்த்தால் ஓமைக்ரான் பாதிப்பு அதிக தீவிரமாகவும், உயிரிழப்பையும் ஏற்படுத்தாது.

ஓமைக்ரான் பரவலின் வேகம் மருத்துவத்துறையில் பெரிய தாக்கத்தையும் ஏற்படுத்தும். நோயாளிகள் அனுமதிக்கப்படும் எண்ணிக்கை அதிகமாக இருக்க வாய்ப்புள்ளது.

நுரையீரல் தொடர்பான பாதிப்புகள் தீவிரமாக இருப்பவர்களுக்கு கொரோனா என்றில்லாமல் வேறு எந்த தொற்று நோய் ஏற்பட்டாலும் பாதிப்பு சற்று தீவிரமாகவே இருக்கும்.

இரண்டாம் அலையில் அதிக பாதிப்பு ஏற்பட்ட போது அதை சமாளிக்கக் கூடிய வகையில் கே.எம்.சி.ஹெச் மருத்துவமனையில் அனைத்து வசதிகளும் இருந்தது. மருந்து போன்றவற்றிக்கு எந்த தட்டுப்பாடும் ஏற்படவில்லை. தற்போது மூன்றாம் அலை ஏற்பட்டால் எதிர்கொள்ளக்கூடிய வகையில் இட வசதி, படுக்கை வசதி, மருத்துவர்கள், மருந்துகளின் இருப்பு என தேவையான அனைத்தும் போதுமான அளவு உள்ளது.







# A Golden Army is born in PSG CAS!



*Dr.Sameeran (2nd Right) launching the Chapter at PSG CAS in the presence of (from left), Dr.J.S.Bhuvaneswaran, Rajesh Trivedi, L.Gopalakrishnan, D.Brindha, Kala Balasundaram and V.M.Muralidharan.*

David Karunakaran
The Covai Mail

"Go and train one in every family", that was the appeal made by Dr.Abdul Kalam to the Not-for-Profit organization Alert, almost a decade ago.

The training Dr.Kalam wanted Alert to take it to the masses was Emergency Medical care. He wanted people to know about administering first aid at the Golden Hours.

Golden Hours are crucial period between the time of an emergency (an injury due to accident or a serious health threat) and the time taken to reach a hospital, where every minute must be properly utilized to save lives of people.

In the process of fulfilling Dr.Kalam's wish and command, Alert launched its service in 2006, and on Wednesday, it launched its first ever 'Golden Army' in Coimbatore at the prestigious PSG College of Arts and Science.

'Golden Army is a unique initiative of Alert to create a community of responsible and responsive good Samaritans with knowledge of first aid and response during emergencies,' according to Alert.

The focus here is to provide authentic emergency medical care training to PSG students of the Golden Army Chapter, so that they can help anyone in need of it, and also explain to them about the Samaritan Law.

The Law allows any person to administer immediate assistance or emergency care to a person who needs emergency medical attention. It protects the volunteers, commonly called 'Good Samaritans' from harassment on the actions being taken by them to save the life of the road accident victims.

Alert has 15 years of expertise in training people in this specific domain, and it has trained 1.5 lakh people so far (out of which 1.3 lakh are youth), and it plans to have a good no.of volunteers in Coimbatore soon.

A MoU was exchanged between PSG CAS and Alert by D.Brindha, Principal, PSG CAS and V.M.Muralidharan, Chairman of Alert in the presence of Prof.Kaliraj, VC of Bharathiar University, L.Gopalakrishnan, Managing Trustee, PSG Institutions, Dr.J.S.Bhuvaneswaran, Director, PSG Super Specialty Hospital, Rajesh Trivedi and Kala Balasundaram, Co-founders of Alert. The Chief Guest, Dr.Sameeran, District Collector shared that prior to two-and-months, an alliance was made in his presence between PSG Super Specialty Hospital and Alert, and in the next two-and-half months another alliance has been forged by the two entities.

He added that Coimbatore has more than 10 lakh ration card holders (meaning that if each family has 3, the number rises to greater level), and if one person in each family gets trained, the outcomes would be phenomenal.

At the event, Karl Marx, Trainer from Alert easily made demonstrations about checking vitals, blood circulation, identifying obstruction in airways and lot more useful stuffs to the students who would become Golden Warriors in future.

# Shambavi Samkalp to aid UPSC Aspirants in Covai

The Covai Mail

Delhi based Shambavi Samkalp Institute launched its center in Coimbatore recently, at Race Course.

This institute has more than three decades of experience in aiding IAS aspirants of the country, and at the inaugural the members of this institute deemed that their nurturing is unique and has time-tested methods & strategies to crack UPSC.

In fact, it was conveyed at this event that Shambavi Samkalp is the only Institute to have a dedicated library for UPSC preparation. The members said that the aspirants joining the institute will be provided dedicated coaching by experienced faculty from Delhi using the valuable course materials of the institute compiled over 30 years.

The classes will be in online and offline mode on fulltime basis (Monday to Friday) and Weekend basis for Professionals. Every week one resource person will come in person and give lecture. There will be regular tests and test series will also be held for Prelims and Mains.

The institute mentioned that when an aspirant from the institute clears UPSC, the fee will be repaid. Ram Madhav, National Executive, RSS who was the chief guest of the occasion suggested that helping aspirants crack UPSC is only part of the process, the institute must consider exposing students to how bureaucratic system works.

He said India has to thrive as a strong economy by 2030, and the prosperity should reach the grassroots level, and for that Civil Servants can be the efficient tool.






# 3 TNAU Students bring home glory!



*G.Mahesh and R.Abinaya*

The Covai Mail

At the 62nd Tamil Nadu State Junior and Youth Carrom Championships, held at Sivakasi recently, TNAU's Agriculture students G.Mahesh and Sneha Prabhu did a fantastic job and won accolades.

Mahesh won the Youth Championship in the Men's category and B.Sneha Prabha bagged bronze medal position in the women's category, bringing laurels to the University. Similarly, at the 59th National Roller Skating Championships held at, Mohali, Punjab R.Abinaya, a Horticulture student of the university got selected for Tamil Nadu Team and was also given the responsibility of leading Tamil Nadu team as its captain, a press release from TNAU said.

Under her leadership, Tamil Nadu team took part 59th National Roller Skating Championships and won the Bronze medal.